## சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டருடன் தொடர்பு ஏற்படுத்த இஸ்ரோ தொடர் முயற்சி



**சென்னை**: சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர், ரோவர் கலன்களுடன் தகவல் தொடர்பு ஏற்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர், 'பிரக்யான்' ரோவர் வாகனம் கடந்த ஆக.23-ம் தேதி நிலவின் தென் துருவப்பகுதியில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டன. இவை 12 நாட்கள் ஆய்வு செய்து பல அரிய தகவல்களை நமக்கு அனுப்பின. அதன்மூலம் நிலவின் வெப்பநிலை, அங்குள்ள தனிமங்கள், நில அதிர்வின் தன்மைஉட்பட முக்கிய அம்சங்கள் கண்டறியப்பட்டன.

இதற்கிடையே நிலவின் தென்துருவப் பகுதியில் இரவு சூழல் வந்துவிட்டதால் லேண்டர், ரோவர் கலன்களின் இயக்கமானது முன்னெச்சரிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டு அவை உறக்க நிலையில் (ஸ்லீப் மோடு) வைக்கப்பட்டன. தென்துருவப் பகுதியில் செப்.22-ம் தேதி பகல்பொழுது வந்தபின் அவை தானாகவே விழித்தெழும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு

வானிலை சூழல்கள் சாதகமாக அமைய வேண்டும் எனவும் இஸ்ரோ அறிவித்திருந்தது.

அந்தவகையில் நிலவின் தென்துருவத்தில் நேற்று முன்தினம் முதல் சூரிய ஒளி விழத் தொடங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து திட்டமிட்டபடி உறக்க நிலையில் உள்ள லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் விழித்தெழிந்துவிட்டதா என்பதை அறிவதற்கான பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று ஈடுபட்டனர். ஆனால், லேண்டரை தொடர்பு கொள்ள முடியவில்லை. இருப்பினும், தொடர்ந்து லேண்டருடன் தகவல் தொடர்பு ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ தனது ட்விட்டர் தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், ‘‘விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் கலன்கள் உறக்கத்தில் இருந்து இயல்புநிலைக்கு திரும்பிய நிலையை அறிய அதனுடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை அவைகளிடம் இருந்து எந்த சிக்னலும் கிடைக்கவில்லை. தொடர்ந்து தகவல் தொடர்பை ஏற்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன’’ என்று கூறப்பட்டுள்ளது.

நிலவில் இரவு நேரத்தில் மைனஸ் 200 டிகிரிக்கு மேலாக குளிர் நிலை இருக்கும். அதனால் லேண்டர், ரோவரில் உள்ள சாதனங்கள் கடுமையான குளிர் சூழலில் ஏதேனும் சேதமடைந்துள்ளதா? என்ற ரீதியிலும் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆய்வில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சென்னை - நெல்லை இடையே ‘வந்தே பாரத்’ ரயில் சேவை - பிரதமர் மோடி நாளை தொடங்கி வைக்கிறார்



நெல்லையிலிருந்து சென்னை வந்த வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டமாக தாம்பரத்தில் ஒரு நிமிடம் நின்று சென்றது சரியாக 1:40 மணியளவில் தாம்பரம் ரயில் நிலையத்தில் நின்ற போது எடுத்த படம். படங்கள்:எம்.முத்துகணேஷ்

**சென்னை**: சென்னை - நெல்லை இடையே தென் தமிழகத்தின் முதல் ‘வந்தே பாரத்’ ரயில் சேவையை பிரதமர் மோடி காணொலி வாயிலாக நாளை தொடங்கி வைக்கிறார். ரயிலை 110 கி.மீ. வேகத்தில் இயக்கி நேற்று சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.

இந்திய ரயில்வே, வந்தே பாரத் என்ற பெயரில் நவீன வசதிகளுடன் கூடிய அதிவிரைவு சொகுசு ரயிலை அறிமுகப்படுத்தி இயக்கி வருகிறது. இதில் ஜிபிஎஸ் டிராக்கர், கேமரா, ஒவ்வொரு இருக்கைக்கும் செல்போன் சார்ஜர், தானியங்கி கதவுகள், குளிர்சாதன வசதி என பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன.

அதிகபட்சமாக மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் இயக்க முடியும் என்பதால், பயண நேரம் குறையும். இதனால், இந்த ரயில்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

தமிழகத்தில் சென்னை சென்ட்ரல் - மைசூரு, சென்னை சென்ட்ரல் - கோவை ஆகிய 2 வழித்தடங்கள் உட்பட நாடு முழுவதும் பல்வேறு முக்கிய நகரங்கள் இடையே 25-க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், சென்னை - நெல்லை இடையே நாளை (செப்.24) முதல் வந்தே பாரத் ரயில் இயக்கப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் இந்த சேவையை தொடங்கி வைக்கிறார். இது தமிழகத்தின் 3-வது வந்தே பாரத் ரயில், தென் தமிழகத்தின் முதல் வந்தே பாரத் ரயில் ஆகும். இதில் 8 பெட்டிகள் உள்ளன.

நெல்லை - சென்னை இடையே இரு மார்க்கத்திலும் நேற்று சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இந்த ரயிலை லோகோ இன்ஸ்பெக்டர் காந்தி, லோகோ பைலட் மது மேனன், உதவி லோகோ பைலட் ஜோமோன் ஜேக்கப் இயக்கினர். அதிகபட்சமாக 110 கி.மீ. வேகத்தில் ரயில் இயக்கப்பட்டது.

**தாம்பரத்தில் நிற்கும்:** சென்னையில் இருந்து (எண்.20665) வரும் 25-ம் தேதியும், நெல்லையில் இருந்து (எண்.20666) வரும் 27-ம் தேதியும் வழக்கமான சேவை தொடங்க உள்ளது.

நெல்லையில் காலை 6 மணிக்கு புறப்பட்டு விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம், தாம்பரத்தில் நின்று மதியம் 1.50-க்கு சென்னை எழும்பூர் வந்தடையும். மறுமார்க்கத்தில் எழும்பூரில் பிற்பகல் 2.50-க்கு புறப்பட்டு இரவு 10.40-க்கு நெல்லையை சென்றடையும். செவ்வாய் தவிர மற்ற 6 நாட்களும் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## 19-வது ஆசிய விளையாட்டு போட்டி: சீனாவில் இன்று தொடக்கம்



**ஹாங்சோ**: 19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவில் உள்ள ஹாங்சோ நகரில் இன்று தொடங்குகிறது. இந்த போட்டிகள் கடந்த 2022-ம் ஆண்டு நடத்தப்பட வேண்டியது. ஆனால் கரோனா தொற்று காரணமாக தள்ளி வைக்கப்பட்டிருந்தது. இன்று தொடங்கும் போட்டியானது வரும் அக்டோபர் 8-ம் தேதி வரை நடைபெறுகிறது. இம்முறை 40 விளையாட்டுகளில் 61 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன. போட்டிகள் அனைத்தும் ஹாங்சோ உள்ளிட்ட 5 பகுதிகளில் உள்ள 54 இடங்களில் நடத்தப்பட உள்ளது. இந்த போட்டியில் ஆசிய கண்டங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

மொத்தம் 481 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன. இந்தியாவில் இருந்து 634 வீரர், வீராங்கனைகள் 38 வகையான விளையாட்டுகளில்

பங்கேற்கின்றனர். ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா அதிகபட்சமாக கடந்த 2018-ம் ஆண்டு போட்டியில் 16 தங்கம் உட்பட 70 பதக்கங்கள் வென்றிருந்தது. ஆசிய விளையாட்டு அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறும் போட்டியாக அமைந்துள்ளதால் இந்திய வீரர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

செஸ், இ-ஸ்போர்ட்ஸ், கபடி, காம்பவுண்ட் வில்வித்தை, பிரிட்ஜ், கிரிக்கெட், படகு போட்டி, ஸ்குவாஷ் ஆகிய 8 விளையாட்டுகளில் வலுவான போட்டியாளர்களாக இருப்பதால் இவற்றில் இந்தியா தங்கம் வெல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், டேபிள் டென்னிஸ் ஆகியவற்றிலும் இந்தியா கணிசமான பதக்கங்களை கைப்பற்றக்கூடும்.

தடகளத்தை பொறுத்தவரையில் ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா சாம்பியன் பட்டத்தை தக்க வைத்து க்கொள்ளக்கூடும். 100 மீட்டர் ஓட்டத்தில் ஜோதி யார்ராஜி, நீளம் தாண்டுதலில் ஜெஸ்வின் ஆல்ட்ரின், முரளி ஸ்ரீசங்கர், டிரிப்பிள் ஜம்ப்பில் பிரவீன் சித்ரவேல், 1500 மீட்டர் ஓட்டத்தில் அஜய் குமார் சரோஜ், 800 மீட்டர் ஓட்டத்தில் கிருஷ்ணன் குமார், குண்டு எறிதலில் தஜிந்தர் பால் சிங், 3 ஆயிரம் மீட்டர் ஸ்டீபிள்சேஸில் அவினாஷ் சேபிள் ஆகியோர் தங்கம் வெல்ல அதிக வாய்ப்புகள் உள்ளன. இவர்களுடன் தொடர் ஓட்டத்தில் இந்திய ஆடவர், மகளிர் அணிகளும் முத்திரை பதிக்கக்கூடும்.

ஹாக்கியில் இந்திய ஆடவர், மற்றும் மகளிர் அணியினர் தங்கப்பதக்கம் வெல்லும் முனைப்புடன் களமிறங்குகின்றன. தங்கப் பதக்கம் வெல்லும் பட்சத்தில் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற முடியும். பாட்மிண்டனில் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராகெஷட் ஜோடி, ஹெச்.எஸ்.பிரனோய், பி.வி.சிந்து,

குத்துச்சண்டையில் நிகத் ஜரீன், லவ்லினா போர்கோஹைன், பளு தூக்குதலில் மீராபாய் சானு ஆகியோர் மீதும் எதிர்பார்ப்புகள் உள்ளன.

EVA STALIN IAS ACADEMY